# மின்நிலா

அக்டோபர் 26, 2020



நன்றி : திருமதி
பானுமதி
வெங்கடேஸ்வரன்

மின்நிலா 023

engalblog.blogspot.com

# எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

# இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

# என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.

**Layout by : KGG :**

**============**


**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**



மின்நிலா 022 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

சிதம்பரம் கொத்ஸு - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி.......2
கதை : மாய நோட்டு 1/4 - ஜீவி.......7
கேள்வி பதில்கள்.......15
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் .......18
மீனுக்கு வேர்க்குமோ?::ஸ்ரீராம்.......20
கதம்பம் :: ஸ்ரீராம்.......27
பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்.......32
நேர்மறை செய்திகள்.......39
ஞாயிறு படங்கள் .......47
தகவல் பலகை நண்பர்கள் வீட்டு கொலு :: KGG.......50
குழந்தைகளை குதூகலிக்கச் செய்வீர் ! KGG.......55

குறிப்பு :

நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.

# சிதம்பரம் கொத்ஸு - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி



## தேவையான பொருள்கள்:



கத்திரிக்காய்(பெரிய மங்களூர்
கத்தரிக்காயாக இருந்தால்) - 1
சாதாரண கத்தரிக்காயாக இருந்தால் - 4 அல்லது 5
புளி - எலுமிச்சங்காய் அளவு
மிளகாய் வற்றல் - 5
கொத்துமல்லி விரை - 1 டேபிள் ஸ்பூன்
கடலைப் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்
பெருங்காயம் - ஒரு சிறு கட்டி
நல்லெண்ணய் அல்லது சமையல் எண்ணெய் - 4 குழிக்கரண்டி

தாளிக்க:

எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை.

எப்படி செய்வது என்று பார்க்கலாமா?

இதையெல்லாம் ரெடியாக எடுத்துக் கொண்டு விட்டீர்களா? அவைகளை ஒரு பக்கம் வைத்து விட்டு புளியை வெந்நீரில் ஊற வைத்துக் கொள்ளுங்கள். ஏன் வெந்நீர்? விரைவில் ஊறி விடும், கரைப்பதும் எளிதாக இருக்கும். அது ஒரு பக்கம் ஊறிக் கொண்டிருக்கட்டும், கத்தரிக்காய்களை அலம்பி விட்டு(இதைக் கூட சொல்ல வேண்டுமா? என்று கேட்காதீர்கள், இந்த கொரோனா காலத்தில் கைகளை மட்டுமல்ல காய்களையும் நன்றாக கழுவ வேண்டும்) கரைத்த புளி ஜலத்தில் உப்பு, மஞ்சள் தூள் போட்டு வேக வைக்கவும். புளி ஜலம் அதிகமாகாமல் கத்தரிக்காய் முழுகும் வரை இருந்தால் போதும்.





கத்தரிக்காய் வெந்து கொண்டிருக்கட்டும், இன்னொரு அடுப்பில் ஒரு சிறிய கடாயில் கொஞ்சமாக எண்ணெய் விட்டு, முதலில் கடலைப் பருப்பு, பெருங்காயம் இவைகளை வறுத்துக் கொண்டு பின்னர் கொத்தமல்லி விரை,
மிளகாய் வற்றல் இவைகளை சிவக்க வறுத்து அவைகளை மிக்சியில் பொடி செய்து கொள்ளவும்.



இதற்குள் கத்தரிக்காய்கள் வெந்திருக்கும். ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி, கடுகை வெடிக்கவிட்டு, வெந்த கத்தரிக்காய்களை அதில் போட்டு, நன்றாக மசிக்கவும். பொடித்து வைத்திருக்கும் பொடியை போட்டு சேர்த்து கிளறி இறக்கி வைத்து விடலாம்.






மிக மிக சுவையான இந்த கொத்ஸுவை சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம். இட்லி, தோசை தயிர் சாதம் போன்றவைகளுக்கும் தொட்டுக் கொள்ளலாம். எண்ணெய் நிறைய விடுவதால் வெளியில் வைத்தாலும் கூட ஒரு வாரம் வரை கெட்டுப்போகாது. குளிர்சாதன பெட்டியில் வைத்து பயன்படுத்தினால் அதற்கு மேலும் வைத்துக் கொள்ளலாம்.

சிலர் கடுகு தாளித்தவுடன் பொடியாக அரிந்த வெங்காயத்தை முதலில் வதக்கி விட்டு பின்னர் கத்தரிக்காயை சேர்த்து வதக்குவர்.



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## கதை : மாய நோட்டு 1/4 - ஜீவி



வங்கி கேஷ் கவுண்ட்டரின் வலது உச்சியில் இருந்த எலெக்ட்ரானிக் எண் பலகை ஒளிர்ந்து 52 என்று டோக்கன் எண்ணை ஒலிபரப்பி என்னை உசுப்பி விட்டது.

பெஞ்சில் அமர்ந்திருந்தவன் கவுண்ட்டரை நோக்கி விரைந்தேன். டோக்கனைக் கொடுத்ததும் சரிபார்த்து விட்டு "எப்படி வேண்டும்?" என்றார் கேஷியர்.

"ஐநூறாகவே கொடுத்து விடுங்கள்.." என்றேன். அது தான் என் வழக்கம். மாத ஆரம்பத்தில் இருபதாயிரம் ரூபாய்க்கு ஐநூறு ரூபாய் நோட்டுகளாகவே எடுத்து வருவது தான் வழக்கம்.. ஒரு ரப்பர் பேண்ட் சுற்றி பாண்ட் பாக்கெட்டில் போட்டு வருவது சுலபம்.

காசாளர் ஐநூறு ரூபாய் நோட்டுகளை டிராயரிலிருந்து எடுத்து அடுக்கி மிஷினில் வைத்து இயக்கிய பொழுது கவுண்ட்டரின் முன் பக்கம் இருந்த மிஷின் திரையில் 38 என்று காட்டியது. இன்னும் இரண்டு நோட்டுகளை கேஷியர் எடுத்து செருகி மிஷினை இயக்கியதும் 40 எண்ணைக் காட்ட நோட்டை எடுத்து என் பாஸ் புக்கில் வைத்துத் தந்தார். ரப்பர் பேண்ட் கேட்டு வாங்கிக் கொண்டேன். சந்தேகத்திற்கு நானும் ஒருதடவை நோட்டுக்களை எண்ணி திருப்தியுடன் பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன். உடனே வங்கியை விட்டு வெளிவராமல், பாஸ்புக் எண்ட்ரி மிஷினிடம் சென்று பதிவு செய்து கொண்டேன். இன்றைய தேதியில் 90456 ரூபாய் இருந்தது.

வழக்கமாக பால்காரன், பூக்காரம்மா, பேப்பர் பையன், காஸ் சிலிண்டர் சப்ளை, காய்கறி. மளிகை சாமான்கள் -- இவ்வளவு தான் பணமாகக் கொடுக்கும்

செலவுகள். எழுபத்து ஐந்து வயதுக்கு மேலாகி விட்டதல்லவா, இந்த தேசத்தில் எந்த மருத்துவ காப்பீடு திட்டங்களுக்கும் லாயக்கற்ற வயது. அல்லது அவர்கள் சீந்தாத வயசு. ஆகையால், தன் கையே தனக்குதவி என்ற ஞானத்தில் எதிர்பாராத அவசர செலவுகளுக்கு வேறொரு வங்கியின் டெபிட் கார்ட் இருக்கிறது. அந்த வங்கிக் கணக்கில் இரண்டு லட்சமாவது இருப்பில் இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்வேன்.

காசாக கொடுக்க வேண்டிய செலவுகளுக்கு ஐநூறு ரூபாயை கொடுத்து பாக்கியை சில்லறை நோட்டுகளாக அடுக்கி வைத்துக் கொள்வது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. அவை சிறு சிறு செலவுகளுக்குத் தோன்றாத் துணையாய் இருக்கும். அதனால் நூறு, ஐம்பது, இருபது, பத்து என்று சில்லறை நோட்டுகளும் கைவசம் எப்பொழுதும் இருக்கும். காசு கொடுத்துத் தான் எல்லாம். கடன் என்ற பேச்சுக்கே இடமில்லை. வீட்டின் வரவு செலவு கணக்குகள் அத்தனையும் பல வருஷங்களாக என் பொறுப்பில் தான்.

"ஏங்க.. வாசல்லே யாரோ கூப்பிடறாங்க, பாருங்க.. கைவேலையா இருக்கேன்..."

எக்னாமிக் டைம்ஸ் கலர்ப் பேப்பரில் ஷேர் மார்க்கெட் நிலவரங்களை மேய்ந்து கொண்டிருந்தவன், நேற்றைய மார்க்கெட் சரிவின் சலிப்பினூடே வாசல் பக்கம் வந்தால் தார்ப்பாச்சு வேஷ்டியும் பை வைத்து தைத்த பனியன் - முண்டாசுமாய் கிராமத்து தோற்றத்தில் ராகவையா. ரொம்ப வருஷமாய் எங்கள் சாப்பாட்டுக்கு அரிசி சப்ளை செய்கிற வியாபாரி.

"வழக்கம் போல கொண்டு வர்ற ஐட்டம் தானே கொண்டு வந்திருக்கே?.. அதான் காண்றதுன்னு.." என்றேன்.

"அதே தான் சாமி. இப்போ போனா ரெண்டு மாசத்துக்கு வர மாட்டேன். சேர்த்து வாங்கிக்கங்க.." என்றான்.

"அம்மா என்ன சொல்லுவாங்கன்னு தெரியலியே?.. எதுக்கும் கேட்டுகிட்டு வந்திடறேன்.." என்று உள் பக்கம் திரும்பினேன்.

அதற்குள் ஜானகியே கையைத் தொடைத்தபடியே வந்து விட்டாள். "என்ன, ராகவையா?.. எப்படியிருக்கீங்க?.." சட்டென்று பழக்கமானவர்களிடம் நெருக்கம் கொண்டு விடுவாள் ஜானகி.

"உங்க புண்ணியத்திலே நல்லா இருக்கேம்மா.. ரெண்டு மாசம் கழிச்சுத் தான் வருவேன்.. அதான் சேர்த்து வாங்கிக்கங்கன்னு ஐயா கிட்டே சொல்லிக்கிட்டிருக்கேன்."

"அப்படியா?.. ஏன் வரமாட்டீங்க?.."

"பேத்திக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு. பத்திரிகை கொடுக்க எப்படியும் வருவேன்.. "

"ஓ.. அப்படியா? ரொம்ப சந்தோஷம்ப்பா.. நன்னா இருக்கட்டும்.." என்று வாழ்த்தினாள் ஜானகி. "அதே அரிசி.. அதே விலை தானே?.. "

"அதேதாம்மா.. மார்க்கெட்லே பத்து ரூபா கூடியிருக்கு.. இருந்தாலும் உங்க கிட்டே நா கேக்க முடியுமா?.. ரெண்டு மாச கணக்குப்படி தனிப்பையிலே போட்டு கொண்டாந்து இருக்கேன்.." என்று ஒரு கோணிப்பையை தொட்டுத் தூக்கி "எங்கே வைக்கட்டும், ஐயா?.." என்று என்னைப் பார்த்துக் கேட்டான்.

"உள் ஹால்லே கொண்டு வந்து வைச்சிடு.. அப்புறம் நான் எடுத்து வைச்சிக்கறேன்.. "

"ராகவையா.. காசு வாங்கிண்டு கிளம்பிடாதே.. காபி கலக்கறேன்.. சாப்பிட்டுப் போவே.." என்று ஜானகி உள்பக்கம் வந்தாள்.

ஹாலில் கொண்டு வந்து அரிசியை வைத்தான் ராகவையா. நான் கேல்குலேட்டரை எடுத்து கணக்குப் போட்டு காசு எடுத்து வர உள்பக்க பீரோவிற்கு நகர்ந்தேன்.

அதற்குள் ஜானகி காப்பியோடு வந்து விட்டாள். "உக்காந்து சாப்பிடு.." என்று காப்பியை சின்ன ஸ்டூலின் மேல் வைத்தாள்.



பீரோவினுள் லாக்கர் மாதிரியான ஒரு சின்ன தடுப்புக்குள் ஒரு சின்ன பை. அந்தப் பையினுள் ஒரு பிளாஸ்டிக் டப்பா. அந்த டப்பா தான் எனக்கு ரூபாய் நோட்டுகளை வைக்கும் கருவூலம். அதில் பாங்கிலிருந்து எடுத்து வந்திருந்த ஐநூறு ரூபாய் கட்டை எடுத்தேன். ராகவையாவுக்கு இரண்டாயிரம் ரூபா தர வேண்டும். ஐநூறு ரூபாவா நாலு கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தில் ஜன்னல் வெளிச்சப்பக்கம் வந்து கட்டிலிருந்து நோட்டை எடுக்கும் போது ஒரு நோட்டில் ஏதோ கருப்பாய் திட்டாய் இருப்பது போலிருந்தது. அந்த நோட்டை மட்டும் கட்டிலிருந்து உருவி தனியே எடுத்துப் பார்த்தேன்.

நோட்டில் காந்தி தாத்தா அச்சுக்குக் கொஞ்சம் தள்ளி ஓரப் பக்கமாக தீயில் சுட்டிருந்தது. சுட்ட இடத்தில் சின்னதாய் அரக்குக் கலரில் பொத்தல். சிகரெட் பிடிச்சபடியே நோட்டை வாங்கியிருப்பானோ?.. அல்லது நோட்டை எண்ணியபடியே சிகரெட் பிடிச்சிருப்பானோ? இல்லை, டாஸ்மாக் சம்பந்தப்பட்ட பிரக்ஞையற்ற செயலாய் இருக்குமோ?.. 'அட! வங்கியில் எண்ணிப் பார்க்கும் பொழுது கண்ணுக்குத் தெரியலையே' என்று நொந்து கொண்டேன்.

'அதுக்கென்ன, யாருக்காவது நாலைந்து நோட்டாக கொடுக்கும் பொழுது நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்தால் போச்சு..' என்று நினைத்த அடுத்த வினாடியே 'அதான் ராகவையாவுக்கு இப்போ நாலு நோட்டு கொடுக்கப்

போறையே.. அதோடு சேர்த்துக் கொடுத்துடு..' என்று மனசின் ஒரு மூலையிலிருந்து ஆலோசனை பிறந்தது.

ஆலோசனையை செயல்படுத்த எத்தனிக்கும் போதே, 'கூடவே, கூடாது..' என்று அதே மனசின் புனர் ஆலோசனை பிடிவாதம் பிடித்தது.. 'பாவம். சொந்த நிலத்தின் விளைச்சலை உனக்காக தூக்கிக் கொண்டு வந்திருக்கான்.. பேத்திக்கு கல்யாண்ம்ன்னு வேறே நல்ல சேதியோடு வந்திருக்கான்.. சொந்த பந்தத்தை அழைக்கிற மாதிரி உனக்கும் பத்திரிகை வைக்கறதா சொல்றான்.. அவனைப் போய் ஏமாத்த நினைக்கிறையே! சீ.. நீ எல்லாம் ஒரு மனுஷனா?' என்று மனசின் இன்னொரு பகுதி காறித் துப்பியது.

"என்னங்க.. ராகவையா வெயிட்டிங்.. அவனும் இன்னும் நாலு இடத்துக்குப் போகணுமிலே?" என்று ஹாலிலிருந்து ஜானகியின் குரல்..

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தேன்.

நெருப்புச் சுட்ட அந்த நோட்டை பிளாஸ்டிக் டப்பாவிலேயே வைத்து விட்டு பார்த்து பார்த்து புதிய நோட்டுகளாக நான்கு நோட்டுகள் கட்டிலிருந்து உருவிக் கொண்டு வெளியே வந்தேன். ஜானகி, ராகவையாவிடம் அவன் பேத்தி கல்யாண நிச்சயப்பு விஷயங்களைக் கேட்டுக் கொண்டி ருந்தாள்.

நான் வந்ததும், "பாவம்.. எவ்வளவு நேரம் அவனுந்தான் நிப்பான்?" என்று அவள் கரிசனம் கூடியது. அந்த எவ்வளவு நேரத்தில் எனக்குள் எத்தனை போராட்டம் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் கொடுத்த நோட்டுகளை வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டு விட்டு ராகவையா போய் விட்டான்.



உள்ளே போனேன். வெளியே போனால் எடுத்துச் செல்லும் பர்ஸில் கைச்செலவுக்காக ஐந்து ஐநூறு ரூபா நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு அதன் மத்தியில் அந்த நெருப்பு பட்ட நோட்டை நுழைத்து

வைத்தேன்.. யாருக்கானும் கொடுக்கும் பொழுது நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்து விடலாம் என்பதற்காக இந்த ஏற்பாடு.

மாலை வந்ததும் கடைத்தெரு பக்கம் போய் இந்த செல்லா நோட்டை யாரிடமாவது தள்ளி விடலாமா என்று மனசில் நமநம. "கடைத்தெரு போறேன்.. ஏதாவது வேணுமா?" என்று ஜானகியிடம் கேட்டதற்கு "நாளைக்கு வெள்ளிக்கிழமை அல்லவா?.. பூஜைக்கு வேணும்.. வாழைப்பழம் கைவசம் இருக்கு.. பாக்கு கூட இருக்கு.. ரெண்டு ரூபாவுக்கு வெற்றிலை மட்டும் வாங்கி வாங்க.." என்றாள்.

இருநூறு, முன்னூறு செலவு வைக்கிற மாதிரி இவள் ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தால் இரண்டு ரூபாவுக்கு சொல்கிறாளே என்று எரிச்சலாக வந்தது. ஒருவழியாக ஆசுவாசப்படுத்திக் கொண்டு செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

காற்று சுகமாக இருந்தது, மனசுக்கு இதமாக இருந்தது. ஒரு ஐநூறு ரூபா ஏமாந்ததற்கு இந்த அளவு மனச் சலிப்பு கூடாது என்று தோன்றியது. 'வாழ்க்கையில் சந்தோஷம் வேண்டும்; அது இருந்தால் எவ்வளவு வேணுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம்..' என்று அனுபவ ஞானம் போல ஒரு சந்நியாசி நேற்று டிவியில் சொன்னது நினைவுக்கு வந்து செயற்கையாக ஒரு சந்தோஷ வேட்கையை மனசுக்குள் உற்பத்தி செய்து கொண்டேன். வலிய சிரிப்பை வரவழைத்துக் கொள்வது கஷ்டமான காரியம் தான். நாகேஷே அது பற்றிச் சொன்னதாக ராத்திரி மலரும் பூ பத்திரிகையில் பெட்டிச் செய்தி படித்திருக்கேன். அதை நினைத்த பொழுதே இயல்பாகவே சிரிப்பு வந்து விட்டது. அதே மூடில் கடைத்தெருவில் காசுக் கடைத் தெரு பக்கம் ஒரு உலா வந்தேன்.

எங்கள் ஊர் முரளி ஸ்வீட் பிரபலமான கடை. காசுக்கடைத் தெருவில் தான் இருக்கிறது. நகைகளுக்கும் ஸ்வீட்களுக்கும் என்ன பந்தமோ தெரியவில்லை. ஆனால் முரளிக்கு அது பற்றித் தெரிந்திருக்கிறது. அதனால் தான் காசுக்கடை தெருவில் லாலா கடை வைத்திருக்கிறார்.

இனிப்புக் கடையில் வழக்கம் போலவே செம நெரிசல். முரளி கடை இனிப்பு என்றால் அது என்னவோ பைத்தியமாக அலைகிறார்கள். தினப்படிக்கு எவ்வளவு லாபம் என்று கணக்கு போட நேரமில்லாத வியாபாரம். இந்த நோட்டுக்கு இந்த மாதிரி காசில் புரள்கிற ஆளிடம் போய்ச் சேருவது தான் சரியான இடம் என்று

தீர்மானித்து விட்டேன். பத்தோடு பதினொன்று கூட இல்லை ஆயிரமாயிரத்தோடு ஒன்றாக இந்த நோட்டும் சேர்ந்தால் இதை மாற்றிக் கொள்ள அவர்களுக்கு ஆயிரம் வழிகள் இருக்கும் என்ற எண்ணம்.

கூட்ட நெரிசலில் பர்சை பறிகொடுத்து விடக்கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடனேயே படியேறினேன்.. எனக்கு முன்னால் நின்றிருந்த இரண்டு வரிசையை ஒரு வழியாக சமாளித்து விதவிதமான இனிப்புகள் நிரப்பப்பட்ட கண்ணாடி கேஸை ஒரு வழியாக நெருங்கி விட்டேன். எனக்கு வாயில் போட்டால் கரையும் நைஸ் மைசூர்பா ரொம்ப இஷ்டம். ஆனால் ஜானகியோ 'என்னங்க, எப்போ பார்த்தாலும் மைசூர்பாகு?' என்று நான் லாலா கடைகளில் மைசூர் பாகு வாங்கிக் கொண்டு வந்தால் சலித்துக் கொள்வாள். கடை ஸ்வீட்டுகளை வாங்கினால் வீட்டில் செய்வதற்கு சிரமமான ஐட்டமாக இருக்க வேண்டும் என்பது அவள் பாலிஸி; அதனால் அவள் விருப்பப்படி என்ன தேரும் என்று நோட்டமிட்டேன். ஒன்றும் பிடிபடவில்லை.

இந்த ஆள் எதையாவது சட்டுபுட்டுனு வாங்கி நகர்ந்தால் தேவலை என்று தோன்றியது போலும். கடைப்பையன் ஒருவன் எக்கு தப்பாக ஆராய்ந்து கொண்டிருந்த என்னிடம் நெருங்கி "என்ன ஸார் வேணும்?" என்றான்.



தடிமனான வெண் சுருட்டு போல ஒரு அயிட்டம்; அதன் நடு மத்தியில் பச்சையாக ஒரு வட்டம் போல உருட்டி வைக்கப்பட்டிருந்த இனிப்பு சமாச்சாரத்தைச் சுட்டிக் காட்டி, விலை கேட்டேன். அவன் கீழே குனிந்து பார்த்து விட்டு, "காஜூ பிஸ்தா ரோலா?... கிலோ 800 ரூபா" என்றான்.

சட்டென்று "அரை கிலோ கொடு.." என்றேன். குறைந்த பட்சம் மூன்று ஐந்நூறு ரூபா நோட்டாவது கவுண்ட்டரில் தருவது நல்லது என்று தோன்றியது. அப்போத்தான் 'அந்த' நோட்டையும் மூன்றில் ஒன்றாகச் சேர்த்துத் தர

வாகாக இருக்கும். அந்த ஞானத்தில், "அப்புறம் ஒரு கிலோ மிக்ஸர். ரிப்பன் பக்கோடா அரை கிலோ.;" என்று ஹோட்டல் சர்வர் போல விடுவிடு வேகத்தில் அடுக்கினேன்.

"ஸ்பெஷல் மிக்ஸராவே போட்டுடட்டுமா?" என்றான் பையன்.

"அதென்ன ஸ்பெஷல்?"

"ஸ்பெஷல்ன்னா அதிலே முந்திரிப்பருப்பெல்லாம் கணிசமா போட்டிருப்போம்.."

"ஓ. அப்படியா?.. ஸ்பெஷலாகவே போட்டுடு.."

"மூணாவது அயிட்டம் என்ன சொன்னீங்க?"

"ரிப்பன் பக்கோடா..." என்று கண்ணாடி தடுப்புக்குள் இருந்ததைக் காட்டினேன்.

"ஓ.. நாடாவா?" என்று நான் குறிப்பிட்டதைத் தெரிந்து கொண்டான் பையன்.

எனக்கோ 'அந்த' கரைபடிந்த ஐநூறு ரூபாய் நோட்டை வெகு சாமார்த்தியமாக மாற்றுவதிலேயே நினைப்பு பூராவும் மண்டிக் கிடந்தது. திட்டமிட்ட ப்ளான் படி நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்து விட வேண்டும் என்பதே ஜபித்தலாக இருந்தது.

ஐந்தே நிமிஷம் தான். எடை மிஷினில் நிறுத்து பைகளில் போட்டு வாய்ப் பகுதியில் லேபிள் ஒட்டி, ஒரு பில்லை மட்டும் அதோடு பின் பண்ணி இன்னொரு பில்லை என் கையில் தந்து.... நான் கேஷ் கவுண்ட்டருக்கு வந்து விட்டேன்.

மொத்தம் ஆயிரத்து முன்னூறு ரூபா பில் தொகை.. மூன்று ஐநூறில் 'அந்த' நோட்டும் ஒன்றாக இருந்தால் பாக்கி இருநூறு வாங்கிக் கொண்டு லாலா கடை விட்டு லல்லல்லா பாடிக் கொண்டே தெருவுக்கு வந்து விடலாம் என்று மனம் வெகுவாக கணக்கு போட்டு தீர்மானித்திருந்தது.

[தொடரும் ]

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கேள்வி பதில்கள்

## மறதி எனப்படுவது யாதெனில் ..

வல்லிசிம்ஹன் :
மறதி என்பது வியாதியா? அசிரத்தையா?
முக்கியமானது இல்லை என்று மறப்பதா?

$ சிறு வயதில் சிரத்தையின்மை
மத்ய வயதில் முக்கியமின்மை
வயோதிகத்தில் தேய்மானம்.

# அசிரத்தை எனும் வியாதி !
மூப்பு காரணமாக சமீபத்திய விஷயங்களை எளிதில் மறக்க நேரிடுகிறது. இது அசிரத்தை அல்ல. வியாதியும் அல்ல.
குறித்து வைப்பது, எந்தப் பொருளையும் ஒரே இடத்தில் வைத்திருப்பது போன்ற உபாயங்கள் உதவக்கூடும்.
"அதுவா, அலமாரி மூன்றாம் தட்டு.."

& இந்தக் கேள்விக்கு சரியான, அற்புதமான, அழகான பதில் ஒன்று இருக்கு. அதை இங்கே சொல்லிவிடுகிறேன். அந்த பதிலைப் படித்து நீங்க நிச்சயம் ஆச்சரியப்படுவீங்க. ரொம்ப நாள் யோசித்துக் கண்டுபிடித்தேன். அது என்ன என்று கேட்டீர்களானால் .. -- .. ' அது வந்து --- மறந்து போயிடுச்சு --- '



# மின்நிலா 023

பானுமதி வெங்கடேஸ்வரன் :

**நம்மிடையே உறவினர்கள் யாராவது இறந்து விட்டால் தீட்டு காப்பது என்று ஒரு பழக்கம் இருக்கிறதே அதன் தாத்பர்யம் என்ன? நான் பார்த்தேயிராத ஒருவர் என்னதான் உறவினர் என்றாலும் இறந்து விட்டார் என்பதற்காக நான் பண்டிகைகள் கொண்டாடக் கூடாதா? என்ன அபத்தம் இது? (என்கிறான் என் மகன்.)**

# இதற்கு விடை அளிப்பதற்கான தகுதி எனக்கில்லை. குடும்ப உறுப்பினர்கள் ஒரு சிறிய வட்டத்துக்குள் (ஒரே கிராமம்) வாழ்ந்திருந்த சூழலில் ஒரு வீட்டில் சோகம் இன்னொன்றில் கொண்டாட்டம் என்பது அபத்தமாக இருக்கும் என்பதாலோ, இறந்தவர் ஆவி சில நாட்களுக்கு அங்கும் இங்குமாக அலைந்த வண்ணம் இருக்கும் என்ற நம்பிக்கை காரணமாகவோ இந்த மாதிரியான நியதிகள் விதிக்கப் பட்டிருக்கலாம். பழகி விட்ட காரணத்தால் கைவிட இயலாத நிலையில் இருக்கிறோம்.

& என்னைக் கேட்டால், பண்டிகைகள் என்பது, ஒரு குழுவாக அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் சந்தோஷமாக கழிக்க வேண்டியவை. நாம் பார்த்தேயிராத உறவினர் இறந்துவிட்டார் என்றால் அதற்காக பண்டிகைக் கொண்டாட்டங்களை அறவே விலக்கவேண்டும் என்று இல்லை. என் அப்பா அவர் வாழ்ந்த காலத்தில் ஓர் அற்புதமான விளக்கம் எனக்கு சொல்லியிருக்கிறார். "பண்டிகை காலத்தில், குழந்தைகள் சந்தோஷமாக இருக்கவேண்டும். நம் குடும்பத்தைப் பொறுத்தவரை, அம்மா அப்பா உயிரோடிருக்கும் நிலையில், எந்தக் குழந்தையும் பண்டிகைகள் கொண்டாடாமல் இருக்கக்கூடாது. அம்மாவோ அப்பாவோ இறந்துவிட்டார்கள் என்றால், அவர்களின் மகனோ, கல்யாணமாகாத மகளோ வேண்டுமானால் ஓர் ஆண்டு பண்டிகைகள் கொண்டாடாமல் இருக்கலாம். ஆனால் இறந்தவர்களின் பேரக்குழந்தைகள் பண்டிகை கொண்டாடாமல் இருக்கவேண்டாம்." இதுதான் சரியான நிலைப்பாடு என்று எனக்குத் தோன்றுகிறது.

======

மின்நிலா தீபாவளி மலருக்காக சில கேள்விகளை facebook ல கேட்டு வருகிறேன். facebook கணக்கு இல்லாதவர்கள் இங்கே பதில் சொல்லுங்க. எல்லா பதில்களையும் தொகுத்து மின்நிலா தீபாவளி சிறப்பிதழில் (9.11.2020) வெளியிடுவோம்.

(அங்கே ஏற்கெனவே பதில் அளித்துள்ளவர்கள் இங்கு மீண்டும் அந்த பதிலை சொல்லவேண்டியதில்லை.)

01 : பேஸ்புக், வாட்ஸ் ஆப் போன்ற சமூக தளங்களால் விளையும் நன்மை என்ன, தீமை என்ன?

02 : நீங்கள் இதுவரை சந்திக்காத, உங்களுக்குப் பிடித்த ஒரு நபர் யார் ?

Q 03 : உங்கள் வீட்டில், உங்களுக்குச் சொந்தமான பொருட்களில், மிகவும் உபயோகமானதாக நீங்க கருதும் ஒரு பொருள் எது?

Q 04 : இதுவரை நீங்கள் இருந்த ஊர்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த ஊர் எது?

Q 05 : நீங்க விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி சானல் எது?

===============

மின் நிலா தீபாவளி மலர்
உங்கள் படைப்புகளை
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
நன்றி.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

**எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்**




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ

UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்


## மீனுக்கு வேர்க்குமோ?::ஸ்ரீராம்

**பேஸ்புக்கில் நான் கேட்ட சில சந்தேகங்களும் பதில்களும்!**



Sriram Balasubramaniam
June 1, 2013 at 7:47 PM ·

மீனுக்கு வேர்க்குமோ?
மீன் நீந்தாமல் நிற்குமோ?
தூங்குமோ?
மீனுக்கு தாகம் எடுக்குமோ?
சிங்கம் சிரிக்குமோ?
பறவைக்கு வேர்க்குமோ?
ஆமைக்கு முதுகு அரிக்குமோ?
நத்தைக்கு விக்கல் வருமோ?
எறும்புக்குத் தடுக்குமோ?
இருளைக் கண்டு இரவு பயப்படுமோ?
பல்லிக்குப்
பல் வலிக்குமோ?
சுறாவுக்குச்
சுளுக்குப் பிடிக்குமோ?



K G Gouthaman இதெல்லாம் ஒன்றும் ஆகாது. ஆனா இப்படியே போனா எனக்குப் பைத்தியம் பிடிக்கும்!

Like · Reply · See Translation · 7y · 7

Sairam Gopalan Enna aachu Sriram Balasubramaniam !!

Like · Reply · 7y · 2

Rishaban Srinivasan தேகம் முழுக்க சந்தேகம்

Like · Reply · See Translation · 7y · 3

Saminatha Bharathi யானை பல் தேய்க்குமா....? இது பழகுன்னு விட்டாச்சோ...,? OLD IS GOLD....!

Like · Reply · See Translation · 7y · 1

Subramaniam Kayjee இரவென்பது ஊணும் உயிரும் [ மொழியும் ] இல்லா நிலமைத்தாகலின் அதன் பயம் பயனிலாத் தலை.

Like · Reply · See Translation · 7y · 3

K G Gouthaman பக்கத்துல பரிமேலழகர் யாரும் இல்லையா? யாராவது மேற்கண்ட குறளுக்கு விளக்கம் சொல்லுங்க.

Like · Reply · See Translation · 7y · 2

Revathi Narasimhan மீன் நீந்தாமல் நிற்கும்.நம்மையே பார்க்கும்.

Like · Reply · See Translation · 7y · 2

Revathi Narasimhan தூங்கும் கண்ணைத் திறந்து கொண்டே தூங்கும்

Like · Reply · See Translation · 7y · 2

Revathi Narasimhan சிங்கம் சிரிச்சா பக்கத்தில நிக்கக் கூடாது. சாப்ப்பிட்டுடும்:0

Like · Reply · See Translation · 7y · 3

# மின்நிலா 023

அப்போது போட்ட புதிரும் அதற்கு சுடச்சுட வந்த கமெண்ட்டும்!

**Sriram Balasubramaniam**
October 17, 2013 at 8:27 PM ·

புதிர் :

முதலிரண்டு எழுத்துடன் வந்திணைந்தால் பிரபல நகைச்சுவை நடிகரின் பெண்.
மூன்று நான்குடன் மி சேர்ந்தால் ஒரு எழுத்தாளர்.
இறுதியிரண்டு எழுத்துகளுக்கு இருபொருள். ஒருபொருள் புலவர்.
மூன்றும் ஐந்தும் ராமர் குலம்.

இன்ஸ்பிரேஷன் : காணாமல் போன கனவுகள் ராஜி! 🙂

**Ananya Mahadevan** Sriram அண்ணா, இந்த மாதிரி ஸ்டேட்டஸ்ல்லாம் முதியோர் புதிர்ங்கற டைட்டிலோட வந்தா, நாங்கெளெல்லாம் அப்படியே ஸ்கிப் பண்ண சௌகர்யமா இருக்குமே? கவனிப்பீர்களா? 😛 😛 😛

Like · Reply · See Translation · 5y 👍 3

**Sriram Balasubramaniam** புரிந்துகொண்டேன் Ananya Mahadevan.. முதியோர்களெல்லாம் குழந்தைகள் போலாகி விடுகிறார்கள், அதைத்தான் ரசிக்கிறார்கள் என்று புரிந்து கொண்டேன். இனி சொல்லி விடுகிறேன்!

Like · Reply · 5y 👍 2

பயங்கரமான அந்த வில்லனிடம் தோற்றுப் போன ஹீரோ தற்காலிகமாக வெளியிடத்தில் பதுங்கி இருக்கிறான்.
கதாநாயகனுடைய நாட்டை, அந்த அழகிய நகரத்தை அழிக்க தன் முக்கிய கையாளுக்கு ஆணையிடுகிறான் வில்லன்.

ஆ… ஆனால் அந்தக் கையாள் வில்லனைக் கொல்ல நினைப்போரோடு சேர்ந்து கொண்டு வில்லனைக் கொல்லும் ஒரு முயற்சியில் துணை நிற்கிறான்.

அதிர்ந்து போனாலும் கடுப்பான வில்லன் தனது நம்பிக்கைக்குரிய வேறொரு பயங்கரவாதியை சம்பவ இடத்துக்கு
அனுப்புகிறான். இவன் முன்னவனைவிட ரொம்பவே பயங்கரமானவன்.

அந்த பயங்கரவாதியின் கொடுஞ்செயல்கள் உலகம் அறிந்தவை. அந்த நகர மக்கள் இவனைக் கண்டு நடுங்குகிறார்கள். இவனும் விதம் விதமாய் மக்களின் மீதான தன் கொடுமைகளைத் தொடங்குகிறான்

வில்லனுக்கு துரோகியாய் மாறிய முதல் கையாள் இப்போது வந்திருக்கும் பயங்கரவாதியைச் சந்தித்து அவன் மனதை மாற்ற முயல, இவன் அவனை எச்சரித்து அனுப்புகிறான். தான் அவ்வளவு சுலபமாக முதலாளிக்கு எதிராக மாறமாட்டேன் என்று வில்லனுக்கு விசுவாசம் காட்டுகிறான்.

மக்களைச் சிறிதும் பெரிதுமான விஷயங்களில் மேலும் கொடுமைப் படுத்துகிறான். தகிக்கிறது நகரம்.

நகரின் முக்கிய பகுதிகளில் குண்டுகள் வைக்கப் படுகிறது. இந் நேரத்தில் தற்செயலாக நிகழ்வதுபோல நகரின் சில முக்கியஸ்தர்களுடன் இந்த பயங்கரவாதிக்கு சந்திப்பு நிகழ்கிறது.

நகரின் அழகு சுட்டிக்காட்டப்படுகிறது. அழிப்பது சுலபம், ஆக்குவதே கடினம் என்பது உணர்த்தப் படுகிறது. அழிப்பதாலா, காப்பதாலா? எந்தப் பெயர் வரலாற்றில் நிலைக்கும் என்கிற கேள்வி முன்வைக்கப்படுகிறது.

அங்கே வில்லன் வேறு சில இடங்களில் தோல்வி காண்கிறான். அவனின் கொடூர குணம் இந்த பயங்கரவாதிக்கு உரைக்கத் தொடங்குகிறது. மெல்ல மெல்ல மனம் மாறும் இந்த பயங்கரவாதி மறைந்திருக்கும் ஹீரோவுக்கு படையுடன் வரச்சொல்லி ரகசியத் தகவல் அனுப்புகிறான். அவனும் வருகிறான்.

பெரிய வில்லன் குண்டுகளை வெடிக்கச் செய்து நகரைக் காலி செய்ய தொலைபேசிமூலம் இந்தத் தன் கையாளுக்கு உத்தரவிடுகிறான்.

மறுபடி மறுபடி உத்தரவிட்டும் சம்பவம் ஏன் நடக்கவில்லை என்று வில்லனுக்குப் புரியவில்லை.

இங்கு மக்கள் உற்சாகத்துடன் நகருக்குள் வரும் ஹீரோவுடன் அணிவகுக்கிறார்கள். பிடிபடும் இந்த பயங்கரக் கையாளை நையப் புடைக்கிறார்கள்.

அவர்களுக்குத் தெரியவில்லை, தங்கள் நகரம் அழியாமலும், அழகு மாறாமலும் இருப்பதற்கு அந்த 'பயங்கரவாதி'தான் காரணம் என்று...

இப்படி ஒரு கதையை எத்தனைப் படங்களில் பார்த்திருக்க முடியும்? அந்த பயங்கரவாதி கேரக்டரில் நடிப்பவருக்கு என்ன ஒரு ஸ்கோப்?

நிஜங்கள் நிழலாகும் சமயங்களில் இதுவும் ஒன்று. இது நிஜமாக நடந்த சம்பவம். 1944 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் பாரிஸில் நடந்த சம்பவம்.


Von Choltitz in 1940

ஹீரோ ஜெனரல் டிகால். வில்லன் ஹிட்லர். மாறிய முதல் கையாள் அவன் தளபதி வான் போயன் பர்க். அடுத்து வந்த, நல்லவனாக மாறிய பயங்கரவாதி வான் கோல்டிஸ்.

# மின்நிலா 023




**இது 1946 இல்** படமாகவும் **வந்தது. Is Paris burning? என்கிற பெயரில்.**

இப்போது பத்திரிகைகளுக்கு இந்த மாதிரி வேலைகளிலிருந்து விடுதலை! சினிமா, கிரிக்கெட் பிரபலங்கள் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்! அவர்களை பற்றி செய்தி வெளியிட்டால் படிக்கவும் ஆட்கள் இல்லை. அவர்களும் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். கொரோனா...!

ஆனால் பொதுவாக பத்திரிகையாளர்கள் பரபரப்பு வேண்டி எப்படித் தலைப்பு கொடுப்பார்கள் என்பதெல்லாம் நமக்கும் தெரியும்!

**Sriram Balasubramaniam**
October 4, 2014 at 9:59 AM ·

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்

என்கிறது குறள்.

ஒருவர் சொன்ன ஒரு கருத்தை மட்டும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பது நம் மக்களின் ஒரு குணம். அவர் செய்த அல்லது அவரின் பொதுவான நல்ல குணங்களை யோசித்துப் பார்த்தோமானால் இந்த ஒரு கருத்தை மதிக்கத் தோன்றுமா என்ன? அவரின் அந்த நல்ல குணங்கள் மனதிலிருந்து உடனே மறைந்து விடுமா என்ன?

நடிகர்/ இயக்குநர் பார்த்திபன் கூட இந்த வார விகடனில் தன்னுடைய கருத்துத் திரித்து வெளியிடப்பட்டதற்கு மிக நாகரீகமாக விகடனைக் குட்டி இருக்கிறார்.

பிரபலங்கள் சொல்வதிலிருந்து நடுவிலிருந்து ஒரு வார்த்தையை உருவி முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவது செய்தியாளர்களுக்கும் கைவந்த கலை. அவர்களைப் பற்றி நன்கு தெரிந்த வாசகர்களும் அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதை உடனே நிறைவேற்றி விடுகிறார்கள்.

## மின்நிலா 023

படத்தைப் பார்த்து எழுதிய நாலு வரி!  அதிரா தளத்தில் படத்தைப் பார்த்துக் 'கவிதை' எழுதியது போல...





[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

## கதம்பம் :: ஸ்ரீராம்

**சென்ற வாரம் பேனாவில் ஏதாவது எழுதி புகைப்படமெடுத்து அனுப்பச் சொல்லி இருந்ததற்கு வந்த வரவுகள்... நன்றி நெல்லை, பானு அக்கா, கேஜிஜி, வல்லிம்மா ஏகாந்தன் ஸார்..**

### நெல்லைத்தமிழன்...




!!ஸ்ரீ!!

ருசிக்குக் காரணம் பொருளா மனதா?

பூரி என்றதும் எனக்கு நினைவுக்கு வருவது சில ஹோட்டல்களின் கண்ணாடிப் பெட்டிக்குள் உள்ளிருக்கும் அழகிய எண்ணெய் குறைவான பூரிகள். அப்படியே என் நினைவுக்கு வருவது தெருவோரங்களில் அல்லது சில சுற்றுலாத் தலங்களில் ஆமைவடை, பஜ்ஜி போன்றவற்றை விற்கும் கடைகள். பார்க்க மிக அழகாகவும் ருசியாகவும் இருக்கும். நம் வீடுகளில் அங்குள்ளதைவிட மிகத் தரமான பொருட்கள் உபயோகித்தும், புத்தம் புது எண்ணெயில் பொரித்தும், அந்த ருசி, அழகு ஏன் வருவதில்லை எனத் தோன்றும். ஒருவேளை, அவர்களையே நம் வீட்டுக்குக் கூட்டிவந்து, நாம் பொருட்களைக் கொடுத்து, அவற்றைப் பண்ணச் சொன்னால் அதே ருசி வராதோ? யோசிக்க வைக்கும் கேள்வி.

## மின்நிலா 023

**அடுத்த இரண்டும் பானு அக்கா..**



சுகபோகம், பெண்போகம் இரண்டையும்
விட்டால் சுவர்க்கம் கிட்டும்.

ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம் செய்ய
வேண்டும். உதய நேரத்தில் அதை
கிழக்கு பார்த்து உட்கார வேண்டும்.
காட்சிக்கேன் சூரியன்.

சித்தர் கண்டம் வாசித்தால் ஞானம்
பிறக்கும்

ராமன் எங்கும் வியாபித்திருக்கிறான்.
அதனால் ஸ்ரீ ராம ராம என்று ஜபிக்க
வேண்டும். தேகம் மறக்க வேண்டும்
மந்திரங்களதனையே பூஜித்து வந்தால்
மோக்ஷம் கிடைக்கும்.

சத்யம், சாந்தம், அடக்கம், பொறுமை
இவையே சொந்த பந்தங்கள்.


மேற்படி பொன் மொழிகளை எங்கு

படித்தேன்? எதற்காக எடுத்து வைத்தி-
-ருக்கிறேன் என்று நினைவில் இல்லை.
பின்னர் எதற்கும் பொருத்தி பயன்படுத்தவோ,
முகநூலில் ஸ்டேட்டஸாக போடவோ
குறித்து வைத்திருக்கலாம். வாக்கியம்
சொல்லப் பட்டிருக்கும் விதத்தை
பார்த்தால் சேஷாத்ரி ஸ்வாமிகளின்
உரைகளாக இருக்கலாம் என்று தோன்றுகிறது
என் கிறுக்கல் கையெழுத்தை கேட்டுக்
கொண்டதற்கு நன்றி!

புதன் கிழமைகளில் வாசகர்கள் கேட்கும்
கேள்விகளுக்கு நாம் பதில் சொல்கிறோமே
நாம் கேட்கும் கேள்விகளுக்கு, பல தரப்பட்ட
நபர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்று
நினைத்தேன். ப்ளாகில் கேட்கும் கேள்விகளுக்கு
ப்ளாக் படிப்பவர்கள் மட்டும்தான் பதில் கூறுகின்ற
னர். ஆனால் Facebook ல் கேள்வி கேட்டால்
பல வகை பதில்கள் வருமே என்று நினைத்தேன்.
16.10.20 முதல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு கேள்வி கேட்டு வருகின்றேன்.
பதில்கள் சுவாரஸ்யமாக உள்ளன.
எல்லாவற்றையும் தொகுத்து, மின்நிலா
NOV 9, 2020, தீபாவளி சிறப்பிதழில்
வெளியிட வேண்டும்.
இது என் கையெழுத்து!
K.G. Gouthaman.
17.10.20.

# மின்நிலா 023

## வல்லிம்மா...


உ

19/10/2020

அன்பு நெஞ்சங்களுக்கு அன்பு விசாரிப்புகள்.
மழையடித்து போவதே சில சமயம்
பிழையாகப் போகும் காலம் இது
இதில் கையால் எழுதச் சொன்ன
அன்பு Engal Blog ஸ்ரீராமுக்கு நன்றி
ஐப்பசி என்று தெரிந்து மழை பெய்கிறது
சென்னையில்.
Fall season என்று மழை பெய்கிறது
இங்கு.
ஏதோ ஒரு விதத்தில் மழை பெய்தால்
நன்மைதான்.
அதற்காக [illegible] வெள்ளம் போல
வேண்டாம்.
அந்த இன்னல்களின் மேல் இருப்பவர்களுக்குத்
தொந்தரவு இல்லை. அதுபோலவும் சாதாரண
மக்களே.
இந்த வருடம் சந்தித்த இடர்கள் பல.
எல்லாத் தடைகளிலும் காக்கும்
இறைவன் எப்போதும் காக்க வேண்டும்.
வாழ்க வளமுடன். நன்றி.

ஏகாந்தன் ஸார்..

அதி- அதிகாலை, விழிப்பு வந்தபின்னும்
தூரத்து தெரிவதோ தூக்கம்? தூக்கமில்லை.
தூரத்துக் கனவுகளின் தாக்கம்.
கனவுக்கும் நனவுக்கும் இடைப்பட்ட வெளியில் -

அரங்கேறி நடமாடும் மங்கை...
அரங்கேறி நடமாடும் மங்கை - போல
அன்பே என் இதயத்தில் நீ இருக்கின்றாய்..

அப்போது எதிர்பட்டோர் தெரிந்த கதை,
நாளெல்லாம் அதிர்ந்துகொண்டே இருந்தது.

- ஏகாந்தன்..

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

## பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்

## நெற்றியிலும் திலகமிட்டான் மீராவின் கண்ணன்- உன் நெஞ்சினிலும் திலகமிட்டான் காதலிலே மன்னன்

படம் வெளியான ஆண்டு 1974. சுஜாதா, ஜெய்கணேஷ், படாபட் ஜெயலக்ஷ்மி, ஆகியோருக்கு முதல் படம். திடீர் கன்னையா, ஸ்ரீப்ரியா ஆகியோருக்கு முதல் பேர் சொல்லும் படம்.

25 வாரங்கள் ஓடிய படம்.

அது வந்த நேரத்தில் மிகவும் பேசப்பட்ட படம். மணிரத்னம், பாக்யராஜ், கே எஸ் ரவிக்குமார் போன்றோர் இந்தப் படத்தை தாங்கள் மிகவும் ரசித்த படமாகக் குறிப்பிட்டிருக்கிறார்களாம். அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி இந்தப் படத்துக்குப் பின் பாலச்சந்தர் படங்களில் மிக ஆர்வமுடைய ரசிகர் ஆனதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.
என்ன படம்? அவள் ஒரு தொடர்கதை!




வழக்கம் போல பாலச்சந்தர் கவிதாவையும் - இந்தப் படத்தின் கதாநாயகியின் பெயர் - நிம்மதியாக வாழவிடவில்லை. எதிர்மறை முடிவுதான். இந்தப் படத்தின் சில காட்சிகளின் சில மீள்களை பின்னர் பாலச்சந்தர் எடுத்த மனதில் உறுதி வேண்டும் படத்திலும் காணலாம்!

## மின்நிலா 023

1971 இல் மலையாளத்தில் வெளியான எர்ணாகுளம் ஜங்க்ஷன் படத்தில் நடித்த சுஜாதாவை பாலச்சந்தர் ஸ்க்ரீன் டெஸ்ட் செய்தபோது அவர் மலையாள உச்சரிப்புடன் தமிழ் பேசியது பிடிக்காமல் "இன்று சென்று தமிழ்க்கற்று நாளை வா" என்று அனுப்ப, அப்புறம் ஒரு மாதத்தில் மீண்டும் அழைக்கப்பட்டு ஒப்பந்தம் ஆனாராம். சுஜாதாவின் முதல் தமிழ்ப்படம்.




பாலச்சந்தர் தாதா சாஹேப் வாழ்நாள் சாதனை விருது பெற்றவுடன் டைம்ஸ் ஆப் இந்தியா பாலச்சந்தரின் இந்தப் படத்தை ஒரு சிறந்த படமாக, ஒரு முத்திரைப் படமாகச் சொல்லி இருந்ததாம்.
இந்தப் படத்தில் ரசிகர்களை மிகவும் கவர்ந்த ஒரு அம்சம் கதாநாயகியின் கோபமும், சுருக் சுருக் பேச்சுகளும். அத்தனையும் குடும்பத்தின் நன்மைக்குதான் என்னும்போது பெண்களின் ஆதரவு கிடைத்ததில் ஆச்சர்யமும் இல்லை.

கவிதான்னா நெருப்பு!

இதே படத்தின் படாபட் ஜெயலக்ஷ்மி பாத்திரம் ஒரு தனிரகம். பெண்கள் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று தொடங்கி எம் ஜி சோமனால் தானும், தன் தாயும் ஏமாற்றப்பட்டோம் என்று அறியும்போது வரும் கழிவிரக்கம். கமலும், படா:ːபட்டும் இணைந்து நடித்த ஒரே படமாக இருக்க வேண்டும் இது!



## மின்நிலா 023

இந்தப் படத்தின் பாடல்கள் அத்தனையுமே சூப்பர்ஹிட் பாடல்கள்தான். அதில் 'கடவுள் அமைத்து வைத்த மேடை' பாடல் கேட்டு கேட்டு அலுக்கும் அளவுக்கு தொலைகாட்சி முதல், மற்ற நிகழ்ச்சிகளில் வரை போட்டு தாளித்து விட்டார்கள்.

பாடல்களை கவியரசர் கண்ணதாசன் எழுத எம் எஸ் விஸ்வநாதன் இசை.

நான் இத் திரைப்படத்தைத் தஞ்சையில் பார்த்தேன்.

கண்ணிலே என்ன உண்டு கண்கள்தான் அறியும்... எஸ் ஜானகி குரலில் பாடல்...

கவிதாவுக்கும் ஆசை இருக்கும், காதல் நெஞ்சம் இருக்கும், யாருக்கு புரியப்போகிறது என்னும் அர்த்தத்தில் வரும் பாடல். 'என் மனம் என்னவென்று என்னை அன்றி யாருக்குத் தெரியும்? ஒவ்வொரு வரியிலும் அந்த கேரக்டரின் மனதை, ஏக்கத்தை பிரதிபலித்திருப்பார் கவியரசர். காதலன் இவளின் ஏதோ ஒரு பதிலில் வெறுத்துப்போய் "உன் மனசுல ஈரமே இல்லையா? " என்பது போல ஏதோ கேட்பான். அவனுக்கு பதிலாய் வரும் பாடல்.

பாலச்சந்தர் படங்களில் நிறைய பெண் குரல் பாடல்கள் வரும். அவை மற்ற பாடல்கள் போல அதிகம் கவனத்தைப் பெறாமல் ஏனோ பின் தங்கி இருந்தாலும் என் போன்ற ரசிகர்களின் மனங்களில் இவை இருக்கும்!

கண்ணிலே என்ன உண்டு கண்கள் தான் அறியும்
கண்ணிலே என்ன உண்டு,கண்கள் தான் அறியும்
கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்
கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்
என் மனம் என்னவென்று என்னையன்றி, யாருக்குத் தெரியும்

நெருப்பென்று சொன்னால், நீரிலும் அணையும்
நீரென்று சொன்னால் நெருப்பிலும் வேகும்
நெருப்பென்று சொன்னால் நீரிலும் அணையும்
நீரென்று சொன்னால் நெருப்பிலும் வேகும்
நான் கொண்ட நெருப்பு, அணைக்கின்ற நெருப்பு
நான் கொண்ட நெருப்பு அணைக்கின்ற நெருப்பு
யார் அணைப்பாரோ இறைவனின் பொறுப்பு
என் மனம் என்னவென்று என்னையன்றி, யாருக்குத் தெரியும்

**மின்நிலா 023**

சேலைக்குள் ஆடும் மங்கையின் மேனி
மேனிக்குள் ஆடும் மனமெனும் ஞானி
ஞானியின் மனமும் ஆசையில் தேனீ
ஞானியின் மனமும் ஆசையில் தேனீ
நானொரு ராணி  பெண்களில் ஞானி
என் மனம் என்னவென்று என்னையன்றி, யாருக்குத் தெரியும்

கோடையில் ஓர் நாள் மழை வரக்கூடும்
கோவில் சிலைக்கும் உயிர் வரக்கூடும்
காலங்களாலே காரியம் பிறக்கும்
காலங்களாலே காரியம் பிறக்கும்
காரியம் பிறந்தால் காரணம் விளங்கும்
என் மனம் என்னவென்று என்னையன்றி, யாருக்குத் தெரியும்

கண்ணிலே என்ன உண்டு கண்கள் தான் அறியும்
கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்
என் மனம் என்னவென்று என்னையன்றி, யாருக்குத் தெரியும்

>>>>> **YOUTUBE LINK**

=======================

அடுத்து பி. சுசீலா குரலில் ஒரு இனிய பாடல்.

இந்தப் படத்தில் இப்படி ஒரு பாடல் இருப்பதே தெரியாது என்று, சில வருடங்களுக்கு முன் இந்தப் பாடலை நான் ஃபேஸ்புக்கில் பகிர்ந்திருந்தபோது கீதா அக்கா சொல்லி இருந்தார்கள்!



## மின்நிலா 023

இந்தப் பாடலில் சுசீலாம்மா ஒவ்வொரு தடவையும் 'ஐந்து திங்கள்' என்று சொல்லும் அழகைப் பாருங்கள். ச்சே... கேளுங்கள்! பல வருடங்களாக தான் காதலித்தவன், தன்னை காதலித்தவன் திருமணத்துக்குத் தாமதமாகும் நிலையில் தனது தங்கை (விதவை)யை விரும்புவது கண்டு அவளுக்கே அவனை மணமுடித்து வைத்து, அவள் கருவுற்றதும் பாடும் சந்தோஷப் பாடல். இதே காட்சி அமைப்பில் அவர்களை சீக்கிரமே தனியாகப் போகச் சொல்லும் இடமும் சுஜாதாவின் நடிப்பில் பாலச்சந்தரின் கைவண்ணத்தில் மிளிரும்! சரணத்தில் ஒரு வார்த்தையில் கவியரசர் **வெற்றிமகள்** என்று ஸ்ரீப்ரியாவைக் குறிப்பிடுகிறார் போலும்!



ஆடுமடி தொட்டில் இனி ஐந்து திங்கள் போனால்!
அழகுமலர் அன்னையென ஆனாள்! ஆ...
ஆதரிப்பாள் தென்மதுரை மீனாள்"

"தேடுதடி என்விழிகள் செல்லக்கிளி ஒன்று-
சிந்தையிலே நான் வளர்த்த கன்று-
உன் வயிற்றில் பூத்ததடி இன்று"!

"மந்திரத்தில் மயங்குகிறாள் சந்தனத்தைப் பூசு-
மல்லிகைப்பூ விசிறி கொண்டு வீசு-
அவள் மணவாளன் கதைகளையே பேசு"

**வெற்றிமகள்** கையிரண்டைப் பற்றிவிட்டான் திருடன்
நெற்றியிலும் திலகமிட்டான் மீராவின் கண்ணன் -உன்
நெஞ்சினிலும் திலகமிட்டான் காதலிலே மன்னன்

"கண்ணம்மா என்றழைக்கும் பாரதியின் பாட்டு-
கவிதையிலே நான்ரசித்தேன் கேட்டு-
அதைக்கண்ணெதிரே நீயெனக்குக் காட்டு"

அய்யனுடன் கோவில்கொண்டாள் திருமகளாம் தங்கை
அடிவாரம் தனிலிருந்தாள் அலர்மேலு மங்கை-அவன்
அன்புமட்டும் போதுமென்று நின்றுவிட்டாள் அங்கே

>>> YOUTUBE LINK

====

# SPB

**காட்சிகளை விட்டு விடுங்கள் - அது ரசிக்கக் கூடியதாய் இருந்தாலும்! இது எஸ் பி பி போர்ஷன்.**

**கமல் எஸ் பி பி யிடம் சொன்னாராம். 'உங்கள் குரல் எல்லோருக்கும் பொருந்தும்வண்ணமான ஒரு குரல். யாருக்கு குரல் கொடுத்தாலும் பொருந்தும்' என்று சொன்னதாய் எஸ் பி பி திரு திருப்பூர் கிருஷ்ணனிடம் சொல்லி இருக்கிறார். அவர் பேஸ்புக்கில் பகிர்ந்திருந்தார். உண்மைதான் என்று தோன்றுகிறது.**

**இந்தப் பாடலில் எஸ் பி பி யின் குரல் எந்தப் பெண்ணையும் காதல் கொள்ள வைக்கும்.**

**குழைய வேண்டிய இடத்தில் குழைந்து, உருக வேண்டிய இடத்தில் உருகி..**

**காதல் என்ன கண்ணாமூச்சி ஆட்டமா
தொட்டுச்செல்லும் பட்டாம் பூச்சி கூட்டமா
காதல் என்ன கண்ணாமூச்சி ஆட்டமா
தொட்டுச்செல்லும் பட்டாம் பூச்சி கூட்டமா
கண்ணுக்குள் பாரம்மா நீயின்றி யாரம்மா
கோபங்கள் இன்னும் இங்கு ஏனம்மா**

**காதல் என்ன கண்ணாமூச்சி ஆட்டமா
தொட்டுச்செல்லும் பட்டாம் பூச்சி கூட்டமா.. ஓ.. ஓ...**

**கூந்தல் வருடும் காற்று
அது நானாய் இருந்தேன் தெரியாதா
கொலுசு கொஞ்சும் பாட்டு
அதன் பல்லவி ஆனேன் புரியாதா
சின்ன சின்ன மூக்குத்தியில் வைரமாய்
மின்னுவதும் காதல் தரும் மொழிதான்
வெண்ணிலவு சிந்துகின்ற மழையாய்**

**மின்நிலா 023**

உன்னைச்சுற்றி மூடுவதும் அதுதான்
பனிப்பூவில் வாசமாய் கலந்தேனே நானம்மா

காதல் என்ன கண்ணாமூச்சி ஆட்டமா
தொட்டுச்செல்லும் பட்டாம் பூச்சி கூட்டமா.. ஓ..ஓ..

நிலவை உரசும் மேகம்
அந்த நினைவை நினைத்தே உருகாதா
உயிரை பருகும் காதல்
அது ஒரு நாள் உனையும் பருகாதா
நீ முடிந்த பூவிலொரு இதழாய்
வாழ்ந்து விட்டு போவதற்கு நினைத்தேன்
நீ நடந்த மண்ணெடுத்து சிலநாள்
சந்தனத்தின் வாசம் அதில் முகர்ந்தேன்
நிழல் தீண்டும் போதிலும் மனதோடு வேர்க்கிறேன்
காதல் என்ன கண்ணாமூச்சி ஆட்டமா
தொட்டுச்செல்லும் பட்டாம் பூச்சி கூட்டமா

**>>> YOUTUBE LINK**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## நேர்மறை செய்திகள்

ஸ்ரீநகர்: பயங்கரவாதியை சுற்றி வளைத்த நமது ராணுவ வீரர்கள், அவரிடம் அன்பாக பேசி சரணடைய செய்து, அவருக்கு தண்ணீர் வழங்கிய வீடியோ வைரலாக பரவி வருகிறது. வீரர்களின் மனிதநேயத்தை பலரும் பாராட்டி வருகின்றனர். பயங்கரவாதியின் தந்தை வீரர்களின் காலில் விழுந்து நன்றி தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் போது 31 வயதான ஜஹாங்கிர் என்னும் பயங்கரவாதி தனியாக ராணுவ வீரர்களிடம் சிக்கினான். அவனிடம் நமது ராணுவ வீரர்கள் அன்பாக பேசி, துப்பாக்கிச்சூடு நடத்த மாட்டோம் என உறுதியளித்தனர். இதனையடுத்து, உறுதிமொழியை ஏற்ற ஜஹாங்கிர், சரணடைந்தான். அவருக்கு வீரர்கள் தண்ணீர் கொடுத்து உதவினர். இந்நிலையில், பயங்கரவாதி ஜஹாங்கிரின் தந்தை, ராணுவ வீரர்களின் காலில் விழுந்து, மகனை கொல்லாமல் சரணடைய செய்ததற்காக கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.



பிடிப்பட்ட பயங்கரவாதியிடம் அன்பாக பேசி, சரணடைய செய்து, அவருக்கு தண்ணீர் கொடுத்த ராணுவ வீரர்களின் மனித நேயத்தை பலரும் பாராட்டி வருகின்றனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி


வைரலாக பரவி வருகிறது. அந்த வீடியோவில், ராணுவ வீரர்கள் பேசுகையில், 'ஜஹாங்கிர், உங்கள் ஆயுதங்களை கைவிட்டு எங்களிடம் சரணடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் மறைந்திருக்கும் இந்த இடத்தை நாங்கள் சுற்றி வளைத்துள்ளோம். உங்களுக்கு எதுவும் நடக்காது, உங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்படமாட்டாது. என்று நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம்.



====

பஞ்சாபில், பிறந்து, அயர்லாந்தில் வசித்து வரும் முதியவர் ஒருவர், உடல் எடையை குறைக்க நடைப்பயிற்சியை மேற்கொண்டார். அவ்வகையில் இதுவரை பூமியின் சுற்றளவுக்கு நடந்து சாதனை படைத்துள்ள அவர், இதனை பதிவு செய்ய வேண்டும் என கின்னஸ் அமைப்பிற்கு விண்ணப்பித்துள்ளார்.

பஞ்சாபில் பிறந்தவர் வினோத் பஜாஜ். தற்போது அவருக்கு 70 வயதாகிறது. சென்னையில் பணியாற்றிய அவர், 1975ம் ஆண்டு ஸ்காட்லாண்டில் குடியேறினார். தற்போது அயர்லாந்தின் லிமெரிக் நகரில், குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். அவர், ஓய்வு பெற்ற பொறியாளர் மற்றும் வணிக ஆலோசகர் ஆவார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உடல் எடையை குறைப்பதற்காக நடைப்பயிற்சி மேற்கொண்டார்.உடல் எடையை குறைத்ததுடன், பூமியின் சுற்றளவுக்கு நடந்து புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளதாக கூறுகிறார்.



ஆக்டிவிட்டி டிராக்கர் செயலி

இது தொடர்பாக அவர் கூறுகையில்,
நடைப்பயிற்சி துவங்கியதும், முதல் மூன்று மாதத்தில் 8 கிலோ எடை குறைந்தது. அடுத்த 6 மாதங்களில் 12 கிலோ எடை குறைத்தேன். நடைப்பயிற்சியின் மூலமே எனது எடையை குறைத்தேன். அதற்காக உணவு கட்டுப்பாடுகள் எதையும் மேற்கொள்ளவில்லை. நடைப்பயிற்சியின் போது, நடையை பதிவு செய்ய பேசர் ஆக்டிவிட்டி டிராக்கர் செயலியை பயன்படுத்தினேன். முதல் ஆண்டு முடிவில் 7,600 கி.மீ., தூரம் நடந்தேன். இது இந்தியாவில் இருந்து அயர்லாந்திற்கு நடந்து செல்லும் தூரம் ஆகும். தொடர்ந்து இரண்டாம் ஆண்டு முடிவில் 15,200 கி.மீ., தூரம் நடந்திருந்தேன்.

இது நிலவின் சுற்றளவை(10,921) விட அதிகம் ஆகும். இது எனக்கு அளித்த உற்சாகம் காரணமாக தொடர்ந்து நடக்க உற்சாகம் அளித்தது. இதன்படி கடந்த செப்.,21 அன்று, 1,496 நாட்களில் பூமியின் சுற்றளவான 40,075 கி.மீ., தூரம் நடந்தேன் . ஆனால் ஒரு முறை கூட நகரை விட்டு வெளியே சென்றதில்லை எனக்கூறினார்.

இதனை பதிவு செய்ய கின்னஸ் சாதனை அமைப்பிடம் விண்ணப்பித்துள்ளார். அதனை அந்த அமைப்பு ஆய்வு செய்து வருகிறது.

====

====
நாக்பூர்:மஹாராஷ்டிராவில், கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில், அருகிலுள்ள கிராமங்களுக்கு சென்று, ஏழை மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்து வரும், 87 வயதான டாக்டரின் சேவை, அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

மஹாராஷ்டிரா மாநிலம், சந்திரபூர் மாவட்டத்தில், ராம்சந்திர தாண்டேக்கர், என்ற, 87 வயதான டாக்டர் வசித்து வருகிறார். இவர், 60 ஆண்டுகளாக, 10 கி.மீ., சுற்றளவில் உள்ள குக்கிராமங்களுக்கு தினமும் சென்று, அங்குள்ள ஏழை மக்களுக்கு, இலவச மருத்துவ சிகிச்சைகளை அளித்து வருகிறார்.கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, வயதானோர், வெளியே செல்லாமல் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.



ஆனால், எதையும் பொருட்படுத்தாத தாண்டேக்கர், இந்த தொண்டு சேவையை தொடர்ந்து செய்து வருகிறார்.இதுகுறித்து, தண்டேக்கர் கூறுகையில்,“கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதே என் ஒரே எண்ணம். அதை முன்பும் செய்தேன். அதை நிறுத்தாமல், தொடர்ந்து செய்வேன்,” என்றார்.

====

மதுரை : மதுரையைச் சேர்ந்த, மூன்றாம் வகுப்பு சிறுமி, 'தினமலர்' வாரமலர் இதழில் வெளியான எட்டு வித்தியாசங்கள் போட்டியில் வென்ற பணத்தில், ஆதரவற்ற முதியோர்களுக்கு உணவளித்து சேவை செய்துள்ளார்.

மதுரை, செல்லுாரைச் சேர்ந்த தம்பதி சங்கரபாண்டியன் - தமிழரசியின் மகள் உஷா, 8; அங்குள்ள பள்ளியில், மூன்றாம் வகுப்பு படிக்கிறார்.தம்பதி கூறியதாவது:கொரோனா ஊரடங்கில், பள்ளி செல்லாததால்,வீட்டில் இருக்கும் நேரத்தை பயனுள்ளதாக்க, உஷாவுக்கு கற்று கொடுக்கிறோம். பல ஆண்டுகளாக நாங்கள், 'தினமலர்' வாசகர்கள். சிறுவர் மலர், வாரமலர் இணைப்புகள் உட்பட தினமும் நாளிதழ் படிக்க, மகளை பழக்கி வருகிறோம்.மகளும், வாரமலர்

குறுக்கெழுத்து, எட்டு வித்தியாசங்கள் போட்டிகளில் பங்கேற்பது வழக்கம். இம்முறை எட்டு வித்தியாசம் போட்டியில், 200 ரூபாய் பரிசு கிடைத்தது.

இதையும், மகள் சேமித்து வைத்திருந்த, 400 ரூபாய் மற்றும் கூடுதல் பணம் சேர்த்து, ஆதரவற்ற முதியோர்களுக்கு நேற்று மதிய உணவு வாங்கிக் கொடுத்தோம். நாங்களும் சமூகப் பணிகள் செய்வதால், மகளையும் சமூகப் பணிகளில் இப்போதே ஈடுபடுத்துகிறோம். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை, அனைவருக்கும் பொது அறிவு பெட்டகமாகத் திகழும், 'தினமலர்' நாளிதழ் மற்றும் மகள் படிக்கும் அரசு உதவி பெறும் மனோகரா நடுநிலைப் பள்ளிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.



=====

வாட்ஸ் ஆப் மூலம் கிடைத்த தகவல் :

படத்தில், வேஷ்டி சட்டையுடன், நம் பாரம்பரியத்தைக் காட்டும் அழகான கிராமக் கட்டிடத்துக்கு எதிரில் நின்று கொண்டிருக்கும் “நவயுக டாடா” யார் தெரியுமா?

இவர் தான் ஸ்ரீதர் வேம்பு! உலகப் புகழ் பெற்ற 18000 கோடி டாலருக்கு சொந்தமான “ஸோஹோ கார்ப்பரேஷனின் (Zoho Corporation ) ”, தலைமை நிர்வாக அதிகாரி ( C E O) !
ஏதோ, இந்த மென்பொருள் நிறுவனம், அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் உள்ள சிலிகான் பள்ளத்தாக்கில் இப்போது இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டாம்! அங்கு தான் இருந்தது.

அதன் தலைமையகத்தை, போன ஆண்டு அக்டோபரில், தென்காசிக்குப் பக்கம் இருக்கும் “மத்தளம்பாறை” என்னும் தன் கிராமத்துக்குக் கொண்டு வந்து விட்டார் இந்த மஹாமனிதர்! இப்போது, ஒரே வருஷத்தில், இந்த நிறுவனம், சுமார் 3410

கோடி டாலர் லாபம் அடைந்ததைக் கண்டு, தொழில் நுட்ப வல்லுநர்கள், வியந்து போய் இருக்கிறார்கள்!

மிகப் பெரிய தொழில் ஸ்தாபனத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஸ்ரீதர் வேம்பு போவது சைக்கிளில் தான். சாப்பிடுவதும், டீ அருந்துவதும், கிரிக்கெட் விளையாடுவதும் கிராமத்தில் உள்ள ஏழைக் குழந்தைகளுடன் தான். கிராமத்தில் உள்ள ஏழைக் குழந்தைகளைத் திரட்டி, 4 ஆசிரியர்களை நியமித்து, அவர்களுக்கு நவீன கணினிப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

நவீன மருத்துவமனை, சாக்கடைகள், குடிநீர்வசதி, நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றை அக்கறையுடன் மத்தளம்பாறைக்குக் கொண்டு வந்துள்ளார். இந்தியாவின் கிராமங்களில் உள்ள 8000 இளைஞர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி கொடுத்து , வேலை வாய்ப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளார் இந்த உண்மையான தமிழன்!

மோடி எதிர்பார்த்திருக்கும் ஆதர்ஷ இந்தியர் ஸ்ரீதர் வேம்பு தான். இவர் மாதிரி மாநிலத்துக்கு 10 வழிகாட்டிகள் இருந்தால், நம் நாடு பத்தே ஆண்டுகளில் , அமெரிக்கா, சைனா ஆகிய நாடுகளை எளிதில் முன்னேறிச் சென்று விடும் என்பதில் ஐயம் இல்லை!



=====

face book ல படித்ததை இங்கே உங்களுக்காக பகிர்கிறேன் :

பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் பத்திரிக்கையில் வெளிவந்த நாள் அன்று! கர்நாடக மாநில அளவில் 8வது இடத்தைப் பிடித்த ஒரு மாணவனின் படம் ஒன்றை காண்கிறார் சுதா மூர்த்தி.

ஒல்லியாகவும், வெளிறிப் போயும் இருந்த அந்த சாதாரண மாணவனின் பெயர் ஹனுமந்தப்பா. அவன் கண்களில் ஒரு பிரகாசம் இருந்ததை கவனிக்கிறார் சுதா மூர்த்தி.

அடுத்த நாள் அதே பையனின் பேட்டி அன்றைய செய்தித்தாளில் வந்திருந்தது. அந்த ஹனுமந்தப்பா ஒரு கூலித் தொழிலாளியின் மகன் என்றும், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன் என்றும் அவன் தந்தை ஒரு நாளைக்கு வெறும் நாற்பது ரூபாய் மட்டுமே சம்பாதிக்கிறார் என்றும் அதனால் மேற்கொண்டு படிக்க வாய்ப்பில்லை என்றும் செய்தி வந்திருந்தது.

உடன் அவனது முகவரியைக் கண்ட சுதா மூர்த்தி அவனை பெங்களூரு வரவழைக்க கடிதம் எழுதி உடன் பயணச்செலவும், ஒரு ஆடை வாங்க கூடுதல் பணமும் ஏற்றுக் கொள்வதாக தகவல் அனுப்பியிருக்கிறார்.

அந்தப் பையன் குறிப்பிட்ட நாளில் சுதாவின் அலுவலகம் நுழைகிறான். பெங்களூருக்கு வருவது அதுவே முதல் முறை.

சுதா அவனை வரவேற்று "உன்னுடைய மதிப்பெண்கள் குறித்து மகிழ்ச்சி. நீ விரும்பினால் மேற்படிப்புக்கான செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எந்த மேற்படிப்பாக இருந்தாலும் நாங்களே மொத்த செலவுகளை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறுகிறார்.

ஹனுமந்தப்பா முதலில் திகைத்து பின்னர் தனது கிராமத்துக்கு அருகில் உள்ள பெல்லாரியில் *ஆசிரியர்* பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கு தன் விருப்பத்தை தெரிவித்தான். எந்தவொரு படிப்பென்றாலும் செலவை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறியும் ஹனுமந்தப்பாவின் தேர்வு ஆசிரியராக வேண்டும் என்பதாகவே இருந்திருக்கிறது.

சுதா மூர்த்தி ஒப்புக்கொண்டு மாதாமாதம் எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்க சரியான தகவல்களை தெரிந்து தொடர்பு கொள்வதாக கூறி அவன் ஊர் திரும்பி விட்டான்.

பிறகு ஒரு அஞ்சல் அட்டையில் தனக்கு மாதாமாதம் 300 ரூபாய் தேவைப்படும் என்றும், தனது நண்பருடன் ஓர் அறை எடுத்து தங்கி மேலும் செலவை குறைக்க தாங்களே சமையல் செய்து கொள்ளப் போவதாகவும் அழகான கையெழுத்தில் கடிதம் வந்திருக்கிறது.

ஆறு மாத செலவுக்கு உடனே 1800 ரூபாய் அனுப்பி வைத்துள்ளார் சுதா.

நாட்கள் ஓடின. அடுத்த 6 மாத காலத்துக்கு மீண்டும் 1800 ரூபாய் சுதா மூர்த்தி அனுப்பி வைக்க, ஹனுமந்தப்பாவிடமிருந்து ஒரு கடிதமும் 300 ரூபாய் பணமும் கவரில் வைத்து சுதாவிற்கு திரும்பி வந்துள்ளது.

**கடிதத்தில் கடந்த இரண்டு மாதங்கள் கல்லூரி விடுமுறை என்றும் அதனால் வீட்டில் இருந்ததாகவும் 300 ரூபாய் மட்டுமே செலவானது என்றும் மீதம் 300 ரூபாய் தங்களுக்கு திருப்பி அனுப்புகிறேன் என்றும் எழுதியிருக்கிறது. தயவுசெய்து இதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் வேண்டி எழுதப்பட்டிருந்தது.**

**சுதா மூர்த்தி இப்படி எழுதுகிறார்.**

***நான் ஆடிப் போய் விட்டேன்*.**

***அவ்வளவு ஏழ்மையிலும் எவ்வளவு நேர்மை*?**

**மாதாமாதம் என்ன செலவானது என்பது குறித்த கணக்கை நான் எதிர்பார்க்கவில்லை. இதை ஹனுமந்தப்பா அறிந்திருந்த போதும் மீதி பணத்தை திருப்பி அனுப்பி வைத்த நேர்மையை என்னால் நம்பவே முடியவில்லை என்கிறார்.**

***நேர்மை என்பது குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்ததோ அல்லது ஒருவருடைய கல்வித்தகுதி அல்லது நிதிநிலைமையைப் பொறுத்தோ அல்ல என்பதை அந்த அனுபவம் எனக்கு உணர்த்தியது*.**

***இந்த நேர்மையை எந்தக் கல்லூரியாலும் கற்றுக் கொடுக்க முடியாது*.**

***பெரும்பாலான மக்களுக்கு நேர்மை நேரடியாக இதயத்திலிருந்து மலருகிறது***

**விதைக்க வேண்டும்.**

**ஹனுமந்தப்பா**

***ஓர் முன்மாதிரி மனிதன்*.**

***வாழ்க்கைக்கு ஓர் வீர வணக்கம்*- என்ற நூலிலிருந்து.**

***எழுதியவர்*- *சுதா மூர்த்தி***

**(இன்போசிஸ் நாராயணமூர்த்தி அவர்களின் துணைவியார்)**

**செய்திகள் : நன்றி தினமலர் *telegram* வழி தகவல்கள்.**

---

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# ஞாயிறு படங்கள்

ஆமை அண்ணா எங்கே?

**எலித்தம்பி கேட்டுகிட்டதால ஒரு நாடகம் போட்டோம்!**



**இரு, இரு ஆமை அண்ணன் வந்தவுடன் ஓட்டப்பந்தயம்!**



## மின்நிலா 023

**ஆமை அண்ணா அதோ போகிறான் பார். வா நாமும் ஓடலாம்!**





**அட ! ஆமை அண்ணா குளிக்கப் போயிட்டானே!**



என்னாங்கடா இது! ஆமையும் முயல்களும் என்னை நடுவராக இருக்கச் சொன்னார்கள். இங்கே நான் நடுவுல ஒக்காந்துருக்கேன், யாரையும் காணோம்!




[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# தகவல் பலகை நண்பர்கள் வீட்டு கொலு :: KGG

படம் அனுப்பியவர் : திருமதி பானுமதி வெங்கடேஸ்வரன்



அடுத்து வரும் படங்கள் அனுப்பியவர் : திருமதி ரேவதி நரசிம்ஹன்











மின்நிலா 023

# குழந்தைகளை குதூகலிக்கச் செய்வீர் ! KGG

இந்த தீபாவளித் திருநாள் சமயத்தில், நீங்களும் ஆதரவற்றோர் முகங்களில் புன்னகை பூக்க உதவலாம்.

நீங்கள் விருப்பப்பட்ட தொகையை ஆதரவற்ற குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக நீங்கள் இணையம் மூலம் அனுப்பலாம்.

அந்தக் குழந்தைகளின் சந்தோஷம் உங்கள் தலைமுறைகளை நன்றாக வாழ வைக்கும்.

**You can make a donation in Indian Rupees through NEFT/RTGS/IMPS [even via PayTM, Google Pay, PhonePe, BHIM, Amazon Pay etc ] to our account below:**

**Bank Name: Indian Bank**
**Account Number: 407057376**
**Account Name: Sivananda Saraswathi Sevashram**
**Account Type: SB (Savings Bank) account**
**Bank Branch name: Tambaram East**
**IFSC Code: IDIB000T004**




## LINK : >>>> DONATE

# மின்நிலா 023

என் நண்பருக்காக - இலவச விளம்பரம் : KGG

GST.No.33ANWPS0718A2Z1
CELL :99418 66766 & 72993 66766

Phone : 044-42073030

## FIREWORKS SALES DEPOT - CHENNAI

\# 197, GST, ROAD, RICH 'N' CREAMY BUILDING,
CHROMEPET, CHENNAI-600 044

*STOCKIST OF BEST "COCK BRAND" FANCY FIREWORKS & CRACKERS*

Mfd.By : SRI KALISWARI FIREWORKS PRIVATE LIMITED,
SIVAKASI - 626 123

### PRICE LIST CUM ESTIMATE LIST-2020

#### SPARKLERS

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 2 | 7 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 74-00 |
| 3 | 10 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 89-00 |
| 4 | 12 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 129-00 |
| 5 | 15 cm ELECTRIC (Saadha) | | 2 BX | 93-00 |
| 6 | 30 cm ELECTRIC (Saadha) | | 2 BX | 94-00 |
| 8 | 7 cm COLOURED | | 5 BX | 77-00 |
| 9 | 10 cm COLOURED | | 5 BX | 94-00 |
| 10 | 12 cm COLOURED | | 5 BX | 135-00 |
| 11 | 15 cm COLOURED | | 2 BX | 97-00 |
| 12 | 30 cm COLOURED | | 2 BX | 101-00 |
| 1 | 7 cm GREEN COLOURED | | 5 BX | 77-00 |
| 13 | 10 cm GREEN COLOURED | | 5 BX | 101-00 |
| 15 | 15 cm GREEN COLOURED | | 2 BX | 94-00 |
| 203 | 30 cm GREEN COLOURED | | 2 BX | 110-00 |
| 7 | 7 cm RED COLOURED | | 5 BX | 86-00 |
| 14 | 10 cm RED COLOURED | | 5 BX | 109-00 |
| 16 | 15 cm RED COLOURED | | 2 BX | 96-00 |
| 204 | 30 cm RED COLOURED | | 2 BX | 114-00 |
| 213 | 10 cm 5 in 1 (ASSORTED) | | 5 BX | 107-00 |
| 214 | 15 cm 5 in 1 (ASSORTED) | | 2 BX | 98-00 |

#### CHAKKARS

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 22 | 25 cm GROUND | | 1 BX | 103-00 |
| 23 | 45 cm GROUND | | 1 BX | 98-00 |
| 24 | 70 cm GROUND | | 1 BX | 175-00 |
| 251 | WHISTLING WHEELS | | 1 BX | 114-00 |
| 48 | NATTIYA DHARA | | 1 BX | 135-00 |
| 49 | FLORA FOUNTAIN | | 1 BX | 170-00 |

#### ATOM BOMB

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 31 | SQUARE FOILED | | 1 BX | 50-00 |
| 32 | SQUARE GREEN | | 1 BX | 48-00 |
| 33 | HYDRO FOILED | | 1 BX | 66-00 |
| 34 | HYDRO GREEN | | 1 BX | 60-00 |
| 37 | MAGIC FOUNTAIN | | 1 BX | 140-00 |
| 38 | BULLET | | 1 BX | 40-00 |
| 39 | MINI BULLET | | 1 BX | 28-00 |

#### FLOWER POTS

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 51 | BIG SIZE | | 1 BX | 96-00 |
| 52 | SPECIAL SIZE | | 1 BX | 160-00 |
| 53 | DELUXE SIZE | | 1 BX | 217-00 |
| 54 | SUPER SIZE | | 1 BX | 245-00 |
| 55 | TRI COLOUR | | 1 BX | 238-00 |
| 351 | GIANT FLOWER POTS GREEN | | 1 BX | 155-00 |
| 59 | GOLD FLOWER FUSH | | 1 BX | 181-00 |
| 151 | RANG BARAAT | | 1 BX | 307-00 |
| 56 | BIG GREEN | | 1 BX | 100-00 |
| 58 | BIG RED | | 1 BX | 107-00 |
| 57 | DELUXE -GREEN | | 1 BX | 217-00 |
| 61 | SIREN | | 1 BX | 228-00 |
| 69 | MINI SIREN | | 1 BX | 150-00 |
| 77 | GEMS | | 1 BX | 47-00 |

#### TORCHES

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 62 | MAGIC PENCIL | | 1 BX | 68-00 |
| 63 | SILVER RAIN TORCHES | | 1 BX | 73-00 |
| 64 | OLYMPIC TORCHES | | 1 BX | 123-00 |
| 66 | RED FLARE | | 1 BX | 135-00 |
| 67 | GREEN COLOUR SHOWERS | | 1 BX | 100-00 |
| 424 | SIREN TORCH | | 1 BX | 94-00 |
| 439 | CONFETTI CELEBRATION | | 1 BX | 257-00 |
| 440 | MAGIC PIPE | | 1 BX | 224-00 |
| 447 | SUPER SIX | | 1 BX | 768-00 |
| 71 | JIL JIL (TWINKLING) | | 1 Pkt | 28-00 |
| 72 | GREEN COLOUR (TWINKLING) | | 1 Pkt | 41-00 |
| 76 | RED COLOUR (TWINKLING) | | 1 Pkt | 52-00 |
| 73 | 45 cm TWINKLING STAR | | 1 BX | 28-00 |
| 74 | 60 cm TWINKLING STAR | | 1 BX | 40-00 |

#### ROCKETS

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 81 | ROCKET | | 1 BX | 96-00 |
| 82 | LUNIK EXPRESS | | 1 BX | 160-00 |
| 83 | WHISTLING ROCKET | | 1 BX | 178-00 |
| 163 | SKY WHISTLE | | 1 BX | 135-00 |
| 164 | SKY WHISTLE MINI | | 1 BX | 94-00 |
| 100 | GOLDEN WILLOW ROCKET | | 1 BX | 395-00 |
| 148 | SUPER STAR ROCKET | | 1 BX | 408-00 |

#### AERIAL DISPLAY ITEMS

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 85 | SKY SHOT | | 1 BX | 74-00 |
| 93 | TRI COLOUR ANGELS | | 1 BX | 382-00 |
| 94 | GOLD 'N' ROLL | | 1 BX | 310-00 |
| 95 | TRI COLOUR AKASH BARSAT | | 1 BX | 258-00 |
| 867 | 12 STAR | | 1 BX | 184-00 |
| 87 | 15 STAR | | 1 BX | 197-00 |
| 177 | 12 AERIAL CRACKLING STAR | | 1 BX | 237-00 |
| 405 | RED DIADEM - 30 | | 1 BX | 464-00 |
| 406 | ZINNIA - 20 | | 1 BX | 481-00 |
| 110 | BOOMER 37 | | 1 BX | 615-00 |
| 162 | SKY BUSTER 130 | | 1 BX | 2000-00 |
| 378 | JOY 30 | | 1 BX | 565-00 |
| 478 | JOY 60 | | 1 BX | 1025-00 |
| 178 | JOY 240 | | 1 BX | 3650-00 |
| 507 | ENJOY 180 | | 1 BX | 2915-00 |
| 409 | FANTASTIC 36 | | 1 BX | 10000-00 |
| 89 | SIGNAL ROCKET | | 1 Pkt | 83-00 |
| 90 | AUTOMATIC ROCKET | | 1 Pkt | 83-00 |
| 91 | AERIAL OUT | | 1 Pkt | 80-00 |
| 437 | PENTA SKY FLASH | | 1 BX | 130-00 |
| 537 | TOP 10 - SKY FLASH | | 1 BX | 290-00 |
| 101 | PARACHUTE NIGHTOUT | | 1 BX | 350-00 |
| 102 | PARACHUTE NIGHTOUT-MINI | | 1 BX | 245-00 |
| 280 | GOLDEN EMERALD | | 1 BX | 273-00 |
| 380 | GOLDEN STRAWBERRY | | 1 BX | 280-00 |
| 480 | GOLDEN CINDERELLA | | 1 BX | 273-00 |
| 103 | MERRY GO ROUND | | 1 BX | 217-00 |
| 104 | MULTIPLE AERIAL STAR | | 1 BX | 415-00 |
| 180 | GOLDEN CLASSIC | | 1 BX | 348-00 |
| 411 | GOLDEN CORE | | 1 BX | 355-00 |

# மின்நிலா 023



| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 412 | JASMINE CORE | | [illegible] 1 BX | 355-00 |
| 461 | GREEN CASCO | | [illegible] 1 BX | 380-00 |
| 462 | RED CASCO | | [illegible] 1 BX | 386-00 |
| 464 | CORONET | | [illegible] 1 BX | 470-00 |
| 465 | PANSY | | [illegible] 1 BX | 348-00 |
| 108 | AERIAL ECHO | | [illegible] 1 BX | 176-00 |
| 181 | WILLOW GALAXY | | [illegible] 1 BX | 179-00 |
| 514 | RUBY EMERALD MINI | | [illegible] 1 BX | 176-00 |
| 515 | CRIMSON GRAND MINI | | [illegible] 1 BX | 179-00 |
| 516 | PEONY BUDS MINI | | [illegible] 1 BX | 164-00 |
| 517 | CHERRY CLUMP MINI | | [illegible] 1 BX | 170-00 |
| 518 | NEMOPHILA MINI | | [illegible] 1 BX | 175-00 |
| 541 | SILVER DEWS MINI | | [illegible] 1 BX | 172-00 |
| 105 | STAR WARS | | [illegible] 1 BX | 243-00 |
| 156 | RANGEELA | | [illegible] 1 BX | 266-00 |
| 158 | GOLDEN WILLOW | | [illegible] 1 BX | 179-00 |
| 184 | GOLDEN BLINKS | | [illegible] 1 BX | 182-00 |
| 153 | AERIAL GOLD FLASH | | [illegible] 1 BX | 307-00 |
| 414 | RUBY EMERALD | | [illegible] 1 BX | 332-00 |
| 416 | PEONY BUDS | | [illegible] 1 BX | 320-00 |
| 417 | CHERRY CLUMP | | [illegible] 1 BX | 320-00 |
| 418 | NEMOPHILA | | [illegible] 1 BX | 332-00 |
| 421 | GOLD CLUSTERS | | [illegible] 1 BX | 315-00 |
| 441 | SILVER DEWS | | [illegible] 1 BX | 334-00 |

## CRACKERS

| | | | | |
|---|---|---|---|---|
| 111 | LOOSE CRACKERS (100 Pcs) | | 1 Pkts | 57-00 |
| 112 | 20/1000 NAGIN CHORSA | | 10 Pkts | 185-00 |
| 114 | 20/500 GIANT CHORSA | | 5 Pkt | 145-00 |
| 115 | 20/250 GIANT CHORSA | | 2 Pkt | 113-00 |
| 123 | 24 WALA DELUXE | | 1 Pkt | 52-00 |
| 223 | 48 WALA DELUXE | | 1 Pkt | 104-00 |
| 224 | 100 WALA DELUXE | | 1 Pkt | 214-00 |
| 118 | 5 x1000 DOUBLE HORSE | | 10 Pkt | 118-00 |
| 119 | 5 x500 PARROT | | 10 Pkt | 182-00 |
| 120 | 5 x250 COCK MOTTA | | 5 Pkt | 124-00 |
| 121 | 100 WALA | | 2 Pkt | 142-00 |

## ASSORTMENT

| | | | | |
|---|---|---|---|---|
| 140 | GIFT BOX MINI | | 1 BOX | 360-00 |
| 141 | GIFT BOX | | 1 BOX | 645-00 |
| 142 | PRESENTATION -KRISHNA | | 1 BOX | 1235-00 |
| 158 | DEEP VARSHA | | 1 BOX | 3050-00 |
| 159 | SUBH VARSHA | | 1 BOX | 1835-00 |

## DISPLAY SPECIAL

| | | | | |
|---|---|---|---|---|
| 840 | 2021 | | 1 Piece | 530-00 |
| 187 | SUN RISE | | 1 Piece | 205-00 |
| 188 | FALLS | | 1 Piece | 460-00 |

## CAP

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | RING CAP | | 5 Pkts | 32-00 |

## PAPER CAP

| | | | | |
|---|---|---|---|---|
| 801 | COCK BRAND DOT CAP | | 10 Pkt | 65-00 |
| 802 | COCK BRAND ROLL CAP | | 10 Pkt | 65-00 |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

We Care, We plant, we nurture
25,000 trees in our factories

மின்நிலா 023

# உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

**engalblog@gmail.com**

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
**engalblog@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !



**ஞாபகம் இருக்கட்டும்.**
**மின்நிலா இருபத்தைந்தாவது வார இதழ் (9.11.2020) தீபாவளி சிறப்பிதழ். உங்கள் படைப்புகளை (கதை, கட்டுரை, கவிதை, படங்கள், துணுக்குகள்) engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு, நவம்பர் ஆறாம் தேதிக்கு முன்னதாக அனுப்பவும்.**